# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 30/ந/2018**

**நாள் : 10/08/2018**

**திரு சுப. பழனியப்பன்,**
**சிதம்பரம் – 608 001.**

– **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர் மற்றும் நகர**
**அளவையாளர்,**
**சிதம்பரம் நகராட்சி,**
**சிதம்பரம்.**

– **எதிர் மனுதாரர்கள்**

கடலூர் மாவட்டம், எண்.2, பெரிய காஜியார் தெருவில் வசிக்கும் திரு சுப. பழனியப்பன் அவர்களின் 27.01.2018 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 030/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனு சம்பந்தமாக நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் மனுதாரர் விசாரணையின்போது அளித்த வாக்குமூலம் ஆகியவை பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகராட்சி, எண்.2, பெரிய காஜியார் தெருவில் வசிக்கும் திரு சுப. பழனியப்பன் என்பவர், காரைக்குடி நகராட்சி, வார்டு எண்.10, பிளாக் எண்.5–இல் 243/P நகரளவை எண்ணுள்ள நிலம் தங்களுக்குப் பாத்தியப்பட்டதென்றும், அச்சொத்தினை 04.12.2017 நாளிட்ட கடிதத்தில் அளவீடு செய்து தரக்கோரி காரைக்குடி நகராட்சி ஆணையருக்கு முறையிட்டும் அந்நிலம் நில அளவை செய்து தரப்படவில்லை எனத் தெரிவித்து அதனை நில அளவீடு செய்து தர ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. 06.03.2018 நாளிட்ட கடிதத்தில் மனுதாரரின் 04.12.2017 நாளிட்ட கடிதத்தினை அஞ்சல் துறை மூலம் பெற்ற இளநிலை உதவியாளர் உடல் நலக்குறைவால் 28.01.2018–இல் இயற்கை எய்திவிட்டார் என்றும் எனவே, அவர் பெற்ற மனுதாரரின் கடிதத்தினை தேடிக் கண்டுபிடிக்க வழிவகை இல்லாத சூழல் ஏற்பட்டது என்றும், மேலும், நகராட்சி ஆணையரால் ஆவணங்களை திருத்தம் செய்வதோ, பட்டா மாறுதல் செய்வதோ இதுநாள்வரை நடைமுறையில் இல்லை என்றும், முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டது போன்று நகரளவை எண்.243/P சம்பந்தப்பட்ட பதிவுறுகள் எதுவும் நகராட்சி ஆணையரால் திருத்தம் செய்யப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

3. முறையீட்டு மனுதாரரிடம் 17.07.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. காரைக்குடி நகராட்சி, வார்டு எண்.10, பிளாக் எண்.5, நகரளவை எண்.243(பகுதி) நிலத்தினை 2002–ஆம் ஆண்டுக்கு முன்னர் உள்ள நில அளவுகளின்படி அளவீடு செய்து தர ஆணையிடுமாறு விசாரணையின்போது மனுதாரர் கேட்டுக்கொண்டார்.

4. முறையீட்டு மனுதாரர், காரைக்குடி நகராட்சி ஆணையாளருக்கு முகவரியிட்ட கடித்தில், 1996–ஆம் ஆண்டு மறு அளவை மற்றும் பழைய ஆவணங்கள் அடிப்படையில் நில அளவை செய்யக்கோரி 04.12.2017 நாளிட்ட கடிதத்தில் கோரியுள்ளார். எனவே, இந்நேர்வில் ,நில அளவீடு செய்வதற்கான உரிய விதிகள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றி முறையீட்டு மனுதாரரின் நிலத்தினை அளவீடு செய்ய உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018– ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள், 10–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

21/8/2018

செயலாளர்.

பெறுநர்

1. திரு சுப. பழனியப்பன்,
எண்.2, பெரிய காஜியார் தெரு,
சிதம்பரம் – 608 001,
கடலூர் மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
காரைக்குடி நகராட்சி,
காரைக்குடி,
சிவகங்கை மாவட்டம்.

நகல்: முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி